முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் – 85/2021

**வாதி தரப்பு சாட்சி–1 தங்கராஜ் திரு.என்.கார்த்திக், இளநிலை உதவியாளர்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 09.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) தாவா எத்தனை அயிட்டத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 2 அயிட்டத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது, மொத்தம் 2 ஏக்கர் 50 சென்ட் ஆகும். தாவா முதல் அயிட்ட சொத்திற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் எனது பெயரில் உள்ளது. யாரிடம் இருந்து கிரையம் வாங்கினேன் என்றால் சீதாலட்சுமியிடம் இருந்து வாங்கினேன், தேதி ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்டுள்ள கருப்பஉடையார் யார் என்றால் சீதாலட்சுமியின் தகப்பனார். கருப்பஉடையார் கிரைய ஆவணத்தில் சர்வே எண்.780/3ல் ஒரு ஏக்கர் 20 சென்ட் நிலமும், அதே சர்வே எண்ணில் மற்றொரு ஒரு ஏக்கர் 20 சென்ட் நிலமும், சர்வே எண்.779/2ல் 10 சென்ட் நிலமும் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். 10 சென்ட் நிலம் என்பது கிணற்று பாகம் என்றும், அதில் எனக்கு ஒரு பாகம் பாத்தியம் என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ.2 ஆவணத்தில் கிரைய சொத்து விபரத்தில் தென்கோடியில் ஆட்கள், கால்நடைகள் நடந்து கொள்ளும் பாத்தியம் தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கருப்ப உடையார் மேற்படி சொத்தை வா.சா.ஆ.3 மூலமாக சீதாலட்சுமிக்கு கொடுத்துள்ளாரா என்றால் ஆமாம். சீதாலட்சுமியிடமிருந்து நானும், எனது தம்பி சீனிவாசனும் கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். சீனிவாசனை இவ்வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை, அவர் திருமணம் ஆகாமல் இறந்து விட்டார். எங்கள் தாயாரும் இறந்து விட்டார். சீனிவாசன் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

3) சீனிவாசனின் சொத்து அவர் இறந்த பின்னிட்டு எனக்கு பாத்தியம் என்பதற்கான வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சர்வே எண்.780/3B6 என்பது 14 நபர்கள் பெயரில் கூட்டாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி 14 நபர்களையும் வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. சர்வே எண்.780/3B5 என்பது 3 நபர்கள் பெயரில் கூட்டாக உள்ள நிலையில் அவர்களை இவ்வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. தனிப்பட்ட முறையில் பட்டாவில் உள்ள பாதை எனக்கு மட்டும் பாத்தியமா அல்லது பொது மக்கள் அனைவருக்கும் பாத்தியமா என்றால் பொது மக்கள் அனைவருக்கும் பாத்தியம். சாட்சி மீண்டும் பட்டாவில் உள்ள நபர்களுக்கு பாத்தியம் என கூறியுள்ளார்.

4) இவ்வழக்கில் மேற்படி பாதை பொது மக்களுக்கு பாத்தியம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் பட்டாதாரர்களுக்கு தான் பாத்தியம். பட்டாதாரர்களுக்கு பாத்தியம் என வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வருவாய்த்துறை கணக்கில் மேற்படி பாதை நடைபாதையாக தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாதை அமைந்துள்ள பட்டாதாரர்களுக்கு மட்டும் தான் நடந்து செல்ல அதில் உரிமை உள்ளது என்றும் பொது மக்களுக்கும் அதில் பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. உரிய தரப்பினர்களை வழக்கில் சேர்க்காமல் தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**